DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.109/2020

Deposition of witness: PW1

| | | | |
|---|---|---|---|
| Name | தங்கவேல் | Taluk | |
| Father's Name | தனபால் | Village | |
| Age | 70 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **23.02.2026.** | | | |

(Accused present)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி:**

1. நான், எதிரிக்கு எனது மகள் மற்றும் தம்பியிடமிருந்து வாங்கிய தொகையுடன், என்னிடம் இருந்த தொகையையும் சேர்த்து, எனது முந்தைய விசாரணையில் கூறியுள்ள நிலையில், எவ்வளவு பணம் யாரிடமிருந்து வாங்கியுள்ளேன் என்ற விவரம் கூறமுடியுமா என்றால், எவ்வளவு என்று துல்லியமாக என்னால் கூறஇயலாது, ஆனால் தோராயமாக, எனது மகளிடமிருந்து, ரூ–7,00,000/–மும், எனது தம்பியிடமிருந்து, ரூ–50,000/–மும் வாங்கினேன். மேற்படி பணத்தினை நான் பெற்றது தொடர்பாக ஆவணங்கள் ஏதேனும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி எனது தம்பி மற்றும் எனது மகளிடமிருந்து நேரடியாக தான் மேற்படி பணத்தினை பெற்றேன். எனது மகள் பணிபுரிகிறாரா என்றால் இல்லை. எனது தம்பி பண்ருட்டி நகராட்சியில் உதவியாளராக பணிபுரிகிறார். மேற்படி எனது முதல் விசாரணையில் எதிரியினுடைய சூப்பர் மார்க்கெட்டில், நான் தொடர் வாடிக்கையாளர் என்று கூறியுள்ள நிலையில், அந்த சூப்பர் மார்க்கெட்டின், மெம்பர்ஷிப் கார்டு பெற்றுள்ளேனா என்றால் பெற்றுள்ளேன். மேற்படி மெம்பர்ஷிப் கார்டினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மேற்படி மெம்பர்ஷிப் கார்டின் பயனாக எத்தகைய பரிசுப்பொருட்கள் கொடுப்பார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2. நான், மேற்படி சூப்பர் மார்க்கெட்டில் தொடர் வாடிக்கையாளர் இல்லை என்றாலும், அதனால்தான் மெம்பர்ஷிப் கார்டின் பயனாக எத்தகைய பரிசுப்பொருட்கள் கொடுப்பார்கள் என்ற விவரம் எனக்கு தெரியவில்லை என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு காசோலையை யார் பூர்த்தி செய்தது என்றால், எதிரிதான் பூர்த்தி செய்தார். இவ்வழக்கு காசோலையை எதிரி பூர்த்தி செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக இவ்வழக்கு காசோலையை எதிரிதான் பூர்த்தி செய்தது என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனக்கும், எதிரிக்கும் எவ்வித நேரடி தொடர்பும் இல்லை என்றாலும், எதிரியின் தம்பிக்கும், எனது தம்பிக்கும் தான் நல்ல பழக்கம் என்றாலும், அதன்

விளைவாக, எதிரியானவர் எனது தம்பியிடம் ஒரு தனிப்பட்ட காரணத்திற்காக கொடுத்த காசோலையை அவர் அரசு ஊழியர் என்பதனால், என் மூலமாக மோசடி செய்து, இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றாலும், அதற்கு ஆதரவாக இவ்வழக்கில் புகார் மனு தாக்கல் செய்து, நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வங்கியில், கடன் வாங்குவதற்காக முன்பணம் கட்டுவதற்காக தான் என்னிடமிருந்து, எதிரி கடன் வாங்கினார் என்று நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், எதிரியின் வங்கி கணக்கானது நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதிக்கு முன்னதாகவே, செயல்படத்தக்க இயலாததாக மேற்படி வங்கியால் அறிவிக்கப்பட்டுவிட்டது என்றாலும், எதிரி என்னிடம் கடன் வாங்கவேயில்லை என்றாலும் சரியல்ல. நான் உண்மையிலேயே எதிரிக்கு பணம் கடனாக கொடுக்கவேயில்லை என்றாலும், அவ்வாறு கொடுத்திருந்தால் வருமானவரி தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் சரியல்ல, மேற்படி பணமானது நான், எனது ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து பெற்ற பணமாகும். மேற்படி பணமானது உண்மையிலேயே நான், எனது ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து பெற்ற பணமாக இருந்திருந்தால், அதனை நான், எனது வங்கி கணக்கிலேயே தான் வைத்திருப்பேன் என்றாலும், கையில் வைத்திருக்க மாட்டேன் என்றாலும் சரியல்ல. இவ்வழக்கு காசோலையில், குறிப்பிட்டு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் எனக்கு ஆஜர் எதிரியை தெரியவே தெரியாது என்றாலும், நான் அவருக்கு கடன் எதுவுமே கொடுக்கவில்லை என்றாலும், ஆஜர் எதிரிக்கும், இவ்வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**